**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, AMBUR, TIRUPATTUR DISTRICT**

| | |
|---|---|
| Name : பாஸ்கரன் | Father Name : கிருஷ்ணசாமி |
| Village: ஆம்பூர் | Taluk : ஆம்பூர் |
| Age: 57 | Calling: – |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 26.03.2026

**E.P.No.40/2022** **ம.சா.1**

**2ம்-எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் எனது முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் எனது எந்த முகவரியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம்பூர் முகவரியை குறிப்பிட்டுள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் நான் எந்த வேலைக்கும் தற்போது செல்லவில்லை. பெங்களூரில் எனது குடும்பம் உள்ளது. நான் ஆம்பூரில் எனது அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். அப்படியானால் நான் ஆம்பூரில் எப்போதாவது தான் வந்து செல்கிறேனா என்றால் அப்படி இல்லை, எனது அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாததால் அவருடன் ஆம்பூரிலேயே தங்கியுள்ளேன். பெங்களூருக்கு எப்போதாவது தான் செல்வேன். நான் பெங்களூரில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக செல்கிறேன் என்றாலும் முற்றிலும் தவறு.

2. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் ஆம்பூரில் உள்ளது. இந்த வழக்கு சொத்து குறித்து நான் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.98/2003 தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம். 2003–ல் வழக்கு தாக்கல் செய்த போது என்ன சொத்து விவரத்தை குறிப்பிட்டேனோ அந்த சொத்து விவரத்தை குறிப்பிட்டுத் தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அன்றைய சர்வே எண் வேறு தற்போது சர்வே எண் மாறியுள்ளது. அவ்வாறு எந்தெந்த சர்வே எண் மாறியுள்ளது என்றும் தற்போது எந்த சர்வே எண்ணில் மாறியுள்ளது என்று இந்த நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கு விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் தெரியும். அவ்வாறு முழுமையாக தெரிந்து தான் எனது முதன்மை சாட்சிய வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து சர்வே

எண்கள் விவரம் என்ன என்றும் தற்போது எந்தெந்த சர்வே எண்கள் மாறியுள்ளது என்றும் அவை யார் யார் அனுபவத்தில் உள்ளது என்றும் எல்லா விவரங்களும் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதுபோன்று பொய்யாக எதுவும் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் சரியான சர்வே எண் விவரங்கள் குறிப்பிடாததால் இந்த நிறைவேற்று மனு நிலைக்கத் தக்கதல்ல என்றால் அது தவறு. இந்த மனுவில் 1ம் மனுதாரர் சகுந்தலா எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் எனது தாயார். ஹேமலதா, மல்லிகா ஆகியோர் என்ன உறவுமுறை என்றால் அவர்கள் எனது சகோதரிகள். 5 முதல் 9 வரை மனுதாரர்கள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் மோகன், லோகமாதா, பாபு, ஸ்ரீதர், பிரேமா ஆகியோர் எனது பெரியப்பா பிள்ளைகள். இந்த நிறைவேற்று மனுவில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றால் 98/2003 வழக்குப்படி எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது, ஆனால் அந்த தீர்ப்பை மீறி மாவட்ட ஆட்சியர் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்கள் சொத்தில் நுழைந்து குடிநீர், கழிவு நீர் குழாய்கள் பதித்துள்ளார்கள் அது நீதிமன்ற அவமதிப்பு என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம்.

3. மனுதாரர்கள் 9 பேரும் தற்போது இருக்கிறார்களா அல்லது அதில் யாரேனும் இறந்துவிட்டார்களா என்றால் பாபு மற்றும் பிரேமா இருவர் மட்டும் இறந்துவிட்டார்கள். இறந்து போன பாபு மற்றும் பிரேமாவின் வாரிசுகளை இந்த மனுவில் சேர்த்து தாக்கல் செய்துள்ளோமா என்றால் பிரேமாவின் ஒரே வாரிசு அமெரிக்காவில் இருக்கிறார், பாபுவிற்கு மனைவி மட்டும் இருக்கிறார், அவர்களின் சம்மதத்தின் பேரில் தான் மனு தாக்கல் செய்தோம். பிரேமா எப்போது இறந்தார், பாபு எப்போது இறந்தார் என்றால் தேதி மாதம் ஞாபகமில்லை. பிரேமா இறந்து சுமார் 23 ஆண்டுகள் ஆகிறது. பாபு இறந்து சுமார் 3 வருடங்கள் ஆகிறாது. வருடம் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் வெகுநாட்களாகிவிட்டது, ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். 8ம் மனுதாரர் பிரேமாவின் ஒரே வாரிசின் பெயர் என்ன என்றால் கீர்த்தி. 7ம் மனுதாரர் பாபுவின் மனைவி பெயர் என்ன என்றால் சங்கரி. முறைப்படி வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத் தக்கதல்ல என்றால் தவறு.

4. மனு சொத்து விவரத்தில் எந்தெந்த டவுன் சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் முழுமையாக தெரியவில்லை என்றால் தவறு. எதிர்மனுதார்கள் தரப்பில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையை நான் பார்த்து படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-G.Thamarai Ilango,B.Sc.,M.L.,
Principal District Munsif,
Ambur.